**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 362/2019**
**வழக்கு சாட்சி PW–1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கனகராஜ் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | தேவதாஸ் கோவில்பிள்ளை நாடார் | தொழில் | : | உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| கிராமம் | : | கல்லிடைக்குறிச்சி | வயது | : | 72 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 7th, 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை :**

நான் தமிழ்நாடு காவல் துறையில் உதவி ஆய்வளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று கல்லிடைக்குறிச்சி குடியிருந்து வருகிறேன். கடந்த 01.05.2012 ம் தேதி கடையம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வளராக பணியிலிருந்தபோது மாலை 17.00 மணிக்கு நானும், கடையம் பயிற்சி உதவி ஆய்வாளர் திரு.ஞானசேகன் மற்றும் காவலர் திரு.ராஜா ஆகியோர் சகிதம் வெடிபொருள் சம்ந்தமாக ரோந்து செல்லும்போது சேர்வைக்காரன் பட்டி பஞ்சாயத்து அம்பேத்கர் காலணியில் ரோந்து செல்லும் போது இரகசிய தகலின் பேரில் அம்பேத்கர் நகரை சேர்ந்த மாடக்கண் மகன் கல்யாணி என்பவர் வீட்டிற்கு பின்புறம் உள்ள காலியிடத்தில் முட்புதிரில் சோதனை செய்யும் போது முட்புதிரில் வெடிபொருள் தயாரிக்க கூடிய பொருட்கள் இருந்தது. மேற்படி பொருட்கள் பற்றி கல்யாணியிடம் விசாரிக்கும்போது அரசு அனுமதியில்லாமல் வைத்திருப்பதாக கூறினார். அதில் கரிப்பொடி 1500 கிராம் இருந்தது. சல்பர் 125 கிராம், அலுமினியம் 790 கிராம், சிகப்பு

கலர் உப்பு 430 கிராம் இருந்தது. அந்த பொருளை அத்தாட்சியில் கைப்பற்றி அத்தாட்சியில் தனிநபர் சாட்சிகள் கையெழுத்த செய்ய முன்வரராததால் நாங்களே கையெழுத்து செய்து அவரை கைது செய்து காவல் நிலையம் வந்து எதிரி மீது காவல் நிலைய குற்ற எண்.90/2012 சட்டப்பிரிவு 5(A), 6 Indian Explosive substance Act 1908 படி வழக்கு பதிவு செய்தேன். அந்த அத்தாட்சி அசாஆ.1. முதல் அறிக்கை அசாஆ.2 ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.01.07 19:00:07 +0530